**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.254** **நாள் : 05.09.2025**

**அடையாறு மண்டலத்தில் தூய்மைப் பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியினை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர் திருமதி கிளாரா அவர்களை மாண்புமிகு மேயர் திருமதி ஆர் பிரியா அவர்கள் மாநகராட்சியின் சார்பில் சால்வை அணிவித்து ரூபாய் 10 ஆயிரம் ரொக்கப் பரிசினை வழங்கிப் பாராட்டினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்தில் (மண்டலம்-13), இ.சி.ஆர் பிரதான சாலையில், மருதீஸ்வரர் கோவில் எதிரே, நேற்று (04.09.2025) தூய்மைப் பணியின் போது தங்கச் சங்கிலியை கண்டெடுத்த திருமதி கிளாரா அதனை உடனடியாக திருவான்மியூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இதனையறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணியாளர் திருமதி கிளாராவின் நேர்மையான இச்செயலினைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணியாளர் திருமதி கிளாராவை தனது முகாம் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து, வெகுமதி வழங்கிப் பாராட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (05.09.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், நேர்மையாகச் செயல்பட்ட தூய்மைப் பணியாளர் திருமதி கிளாரா அவர்களை, ரிப்பன் கட்டடத்தில் உள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து சால்வை அணிவித்து, மாநகராட்சியின் சார்பில் ரூபாய் 10 ஆயிரம் ரொக்கப் பரிசினை வழங்கிப் பாராட்டினார்.

இந்நிகழ்வின் போது, மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் திடக்கழிவு மேலாண்மை கண்காணிப்புப் பொறியாளர் திரு.ஏ.எஸ். முருகன், செயற்பொறியாளர் திரு. ப. விஜய் அரவிந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**